RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt21113

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

வினையெச்சம் - வேற்றுமை ஏற்ற தொழிற்பெயர்களின் தொடரியல் ஒற்றுமை

தி. மோகன்ராஜ் [அ,*]

[அ] இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010, தமிழ்நாடு, இந்தியா

Syntactic Similarities Between Verbal Participles and Verbal Nouns with Case Markers

T. Mohanraj [a,*]

[a] Department of Literature, Tamil University, Thanjavur-613010, Tamil Nadu, India.

Corresponding Author:
mohr_d12@yahoo.co.in

Received : 26-05-2020
Accepted : 19-11-2020

ABSTRACT

In Tamil Grammar, both the verbal participles and verbal nouns play different roles though both of them are derived from verbal roots. Verbal participles make verb phrases by adjoining with the following verbs whereas the verbal nouns act like any other nouns of Tamil language thereby become Subject in a sentence as well as take case markers. However, a close study in the syntactic functions of verbal participles and verbal nouns with case markers helps us to identify that there are instances in Tamil sentences or phrases that the verbal participles can be replaced with the verbal nouns with case markers. This article analyses the occurrences of such interchangeable phrase structures/sentences in Sangam Literature along with the commentaries as substantial evidences. Since these similarities can be found in Sangam Literature itself, this article considers the Verbal participles listed in Tolkappiyam for analysis. This article also gives valid syntactical evidences for not to consider 'ceyaRku' as one of the verbal participles listed in Tolkappiyam.

Keywords: Tolkappiyam, Tamil Grammar, Sangam Literature, Tamil language

ஆசிரியர் குறிப்பு

தி. மோகன்ராஜ் இவர், 'தொல்காப்பியத் தொடரியல் நோக்கில் ஐங்குறுநூறு' என்னும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினைத் தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறையில் மேற்கொண்டு வருகிறார். பல்கலைக்கழக மானியக் குழுவின் 'NET-JRF' தேர்ச்சி பெற்றுள்ளார். தமிழ் மற்றும் மொழியியலில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார். தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள தொடரியற் கருத்துகளை நோம் சோம்ஸ்கி'யின் மாற்றிலக்கண அடிப்படையில் ஆய்வு செய்வதில் ஆர்வம் கொண்டிருப்பதுடன் அது தொடர்பான கட்டுரைகளைப் பன்னாட்டு மற்றும் தேசியக் கருத்தரங்கங்களிலும் இதழ்களிலும் எழுதிவருகிறார்.

முன்னுரை

வினையெச்சம் மற்றும் தொழிற்பெயர் ஆகிய இரண்டும் வினைச்சொல்லிலிருந்து பிறப்பவை. எனினும், இரண்டன் செயற்பாடும் மொழியில் வெவ்வேறு விதமாக அமைந்துள்ளது. வினையெச்சம் மற்றொரு வினையை அவாவி நிற்கும் சொல்லாக நின்று, பல பொருள்களில் அது ஏற்றுமுடியும் வினைச்சொல்லுடன் தொடர்புகொள்கிறது (வினையெச்சம் வினையுடன் கொள்ளும் உறவுநிலையைப் பற்றிய விரிவான விளக்கத்தைச் ச.அகத்தியலிங்கத்தின் சங்கத்தமிழ் IV & சங்கத்தமிழ் V ஆகிய நூல்களில் காணலாம்). தொழிற்பெயர் என்பது பெயரின் ஒருவகைப் பாகுபாடாக நின்று, எழுவாயாகவும் வேற்றுமை ஏற்கும் பெயர்ச்சொல்லாகவும் ஏனைய பெயர்ச்சொற்கள் போன்று செயற்படுகிறது. இந்நிலையில் இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்பில்லாத, வெவ்வேறு மொழிக்கூறுகளாக அமைந்துள்ளன. எனினும், தொடரமைப்பின் ஒருசில இடங்களில் வினையெச்சமும் வேற்றுமை உருபேற்ற தொழிற்பெயரும் நெருங்கிய உறவுடன் செயற்படுகின்றமையைக் காணமுடிகிறது. ஒன்றன் இடத்தில் மற்றொன்று இடம்பெறுகின்றமை, செயற்கு வினையெச்ச வாய்பாட்டின் வடிவ அமைப்பில் தொழிற்பெயர் இடம்பெறுகின்றமை என்ற நிலையில் அவற்றின் உறவைக் காணமுடிகிறது.

இக்கட்டுரை, வினையெச்சமும் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயரும் தொடரமைப்பில் கொண்டிருக்கும் ஒற்றுமையைக் கீழ்க்காணும் பகுப்புகளில் விளக்குகிறது. மேலும், இவ்வாறான மொழியமைப்பைச் சங்க இலக்கியங்களிலிலிருந்தே காணமுடிகிறது ஆகலின், சங்க இலக்கியச் செய்யுள்களையும் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தையும் முன்வைத்து வினையெச்சம் மற்றும் வேற்றுமை உருபேற்ற தொழிற்பெயர்களுக்கு இடையிலான உறவு ஒற்றுமையை இக்கட்டுரை ஆராய்கிறது.

1. வினையெச்சமும் இரண்டாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயரும்
2. வினையெச்சமும் மூன்றாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயரும்
3. வினையெச்சமும் நான்காம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயரும்

வினையெச்சமும் இரண்டாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயரும்

சங்க இலக்கியங்களில் ஒரு சில தொடரமைப்பில் இரண்டாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயர் வரவேண்டிய இடங்களில் வினையெச்சங்கள் வருகின்றமையைக் காணமுடிகிறது. தொல்காப்பிய வினையெச்சங்களின் வருகையைப் பலவாறாக ஆராய்ந்த ச. அகத்தியலிங்கம், செய்யூ, செய்பு, செய ஆகிய மூன்று வினையெச்ச வாய்பாடுகளும் தொழிற்பெயருக்கு மாற்றாகச் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளமையை விளக்கியுள்ளார் (Agesthialingom, S., 2010a; Agesthialingom, S., 2010b). அவர் காட்டியுள்ள சான்றுகள் யாவும் இரண்டாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயர்களாகவே உள்ளன. எனினும், அதற்கான காரணம் அந்நூல்களில் கூறப்படவில்லை. சான்றாக,

மழைகழூஉ மறந்த மாயிருந் துறுகல் (குறுந்.279-5)

என்னும் அடியில் கழூஉ என்னும் செய்யூ வாய்பாட்டு வினையெச்சம் கழுவுதலை என்னும் இரண்டாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயருக்குப் (கழுவுதல்+ஐ) பதிலாக வந்துள்ளது. 'மழை கழுவுதலை மறந்த பெரிய கரிய பொற்றைக்கல்' என்றே உ.வே.சா'வால் உரை எழுதப்பட்டுள்ளது (Swaminatha Iyer, U.V., 2000). 'மழை கழூஉ' என்பதற்கு 'மழை கழுவுதலை' என்றே உரை உள்ளது. இரண்டாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயருக்கு மாற்றாகச் செய்யூ வாய்பாட்டு வினையெச்சம் இடம்பெற்றுள்ளது என்று இதனை விளக்கலாம். இவை இரண்டுமே ஒரே புதைநிலை அமைப்பைக் கொண்ட இருவேறு புறநிலை வடிவங்களாக இருக்கின்றமையால்தான் இவற்றுக்கு இடையில் இவ்வாறான உறவுநிலை அமைந்துள்ளது என நிறுவலாம்.

புறநிலை 1: மழை **கழூஉ** மறந்த மாயிருந் துறுகல்

புறநிலை 2: மழை **கழுவுதலை** மறந்த மாயிருந் துறுகல்

மேற்கண்ட இரண்டு தொடர்களும் பெயரெச்சத் தொடர்களாகும். இவற்றின் புதைநிலை வடிவம் இரண்டு வாக்கியங்களைக் கொண்டுள்ளது. மேலும், இரண்டாம் வாக்கியத்தில் உள்ள செயப்படுபொருளுடன் முதல்வாக்கியம் தொடர்புகொண்டுள்ளது என்பதும் நோக்கத்தக்கது.

புதைநிலை : மழை மாயிருந் துறுகல்லைக் கழுவும்; மாயிருந் துறுகல் அதை மறந்தது.

புதைநிலையின் இரண்டு வாக்கியங்களையும் மாற்றுவிதிகளின் மூலம் இணைக்கும்போது வினையெச்சத்தைக் கொண்ட (கழூஉ) பெயரெச்சத் தொடரையும் இரண்டாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயரைக் கொண்ட (கழுவுதல்+ஐ) பெயரெச்சத் தொடரையும் உருவாக்கலாம். அப்போது அவை இரண்டும் ஒரே பொருண்மையைச் சுட்டும் இருவேறு தொடர்களாக அமையும். இதன் காரணமாகவே, வினையெச்சங்கள் இருக்கும் இடங்களில் இரண்டாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயர்களை நம்மால் மாற்றிப் பொருள் காணமுடிகிறது. ஒரே புதைநிலை அமைப்பு இருக்கும் நிலையில் மட்டுமே இது நிகழும்.

இதே நிலையினைத்தான் செய்பு வாய்ப்பாட்டில் வரும் தொடர்கள் சிலவற்றிலும் காண்கிறோம்.

யாம்தன் உள்ளுபு மறந்தறி யேமே (ஐங்.298-4)

என்றவிடத்தும் உள்ளுபு மறந்தறியேமே என்னும் அடிக்கு ஈழத்து உரையாசிரியர் 'நினைத்தலை ஒருகாலத்தும் மறந்தறியேம்' என்று உரை எழுதியுள்ளார் (Sadasiva Iyer Thi., 1999). உள்ளுபு என்னும் செய்பு வாய்பாட்டு வினையெச்சத்திற்கு நினைத்தலை என்று இரண்டாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயரைக் கொண்டே(நினைத்தல்+ஐ) உரை எழுதியுள்ளார்.

புதைநிலையில், யாம் தன்னை உள்ளுவேம்; யாம் அதை மறந்தறியேம் என்னும் இரண்டு வாக்கியங்கள் இணைவதால் புறநிலையில் உள்ள இரண்டு வாக்கியங்களுக்கும் ஒற்றுமை காணப்படுகிறது.

இதே நிலையைத்தான் செய வாய்பாட்டிலும் சில தொடர்களில் காண்கிறோம்.

---- ---- ---- சேர்ப்பன்

தான்வரக் காண்குவம் நாமே (ஐங்.112 : 2-3)

என்னும் அடிகளுக்குச் 'சேர்ப்பன் வரைவொடு வருதலைக் காண்போம்' என்றே ஈழத்து உரையாசிரியர் உரை எழுதியுள்ளார் (Sadasiva Iyer Thi., 1999). இவ்விடத்தில் வர என்னும் செயவென் வாய்பாட்டு வினையெச்சம் வருதலை (வருதல்+ஐ) என்னும் இரண்டாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயருக்கு மாற்றாக வந்துள்ளது. சேர்ப்பன் வரைவொடு வருவான், நாம் அதைக் காண்குவம் என்னும் இரண்டு வாக்கியங்களை இணைப்பதன் மூலம் புறநிலையில் ஒற்றுமையுடைய இரண்டு வாக்கியங்கள் தோன்றியுள்ளன. மேற்காட்டியவாறு, ஒரே புதைநிலை அமைப்பைக் கொண்டிருக்கும் நிலையில் இரண்டாம் வேற்றுமை ஏற்று வரும் தொழிற்பெயர்கள் வரவேண்டிய இடங்களில் செய்யூ, செய்பு மற்றும் செயவென் வாய்பாடுகள் பயின்று வந்துள்ளமையைக் காணலாம்.

வினையெச்சமும் மூன்றாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயரும்

வினையெச்சம் தான் ஏற்றுமுடியும் வினையுடன் இணைந்து பல பொருள்களைத் தருகிறது. அவற்றை வரிசைப்பொருள், துணைநிகழ்ச்சிப் பொருள், உடனிகழ்ச்சிப் பொருள், நிலைமைப் பொருள், காரணப்பொருள், நோக்கப்பொருள், வினையடைப் பொருள் என அகத்தியலிங்கம் பட்டியலிடுகிறார் (Agesthialingom, 2010a). இவற்றுடன் தாக்கப்பொருள் என்பதையும் பின்னர்க் குறிப்பிட்டுள்ளார் (Agesthialingom, 2010a). காரணப் பொருளில் வரும் வினையெச்சங்கள் மூன்றாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயருடன் ஒரே பொருளில் வருகின்றமையைக் காணலாம். சான்றாக,

அவர் படித்து உயர்ந்தார்

என்பதில் வரும் படித்து என்னும் செய்தென் வாய்பாட்டு வினையெச்சம் காரணப் பொருளில் உயர்ந்தார் என்னும் வினைமுற்றைத் தழுவி வந்துள்ளது. இதனை,

அவர் படித்ததால் உயர்ந்தார்

என்று மூன்றாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயரோடும் கூறலாம்.

காரணப் பொருள் : படித்து உயர்ந்தார் → படித்ததால் உயர்ந்தார் (படித்தது + ஆல்)

இவ்வாறு ஒற்றுமை தோன்றுவதற்குக் காரணம், மூன்றாம் வேற்றுமை ஏதுப் பொருளிலும் வரும் என்று தொல்காப்பியம் கூறுகிறது.

இன்னான் ஏது ஈங்கென வரூஉம் (தொல்.சொல்.72)

என்னும் மூன்றாம் வேற்றுமைக்கான நூற்பாவில் மூன்றாம் வேற்றுமை ஏதுப் பொருளில் வருவது பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆகையால், காரணப்பொருளில் வரும் வினையெச்சமும் மூன்றாம் வேற்றுமையில் வரும் பெயர்த்தொடரும் பொருள் நிலையில் ஒத்திருக்கின்றன. இவ்விடங்களில், மூன்றாம் வேற்றுமை ஏற்ற பெயர் தொழிற்பெயராகவே இருத்தல் உணரத்தக்கது. இதனால்தான் வினையெச்சமும் மூன்றாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயரும் ஒரே பொருண்மையில் வருகின்றன என்று கூறுகிறோம்.

நனந்தலை வேந்தர் தாரழிந்து அலற (பதி. 55-17)

என்னும் அடியில் அழிந்து அலற என்னும் தொடரில் அழிந்து என்னும் வினையெச்சம் அழிந்ததால் அலற என்று காரணப் பொருளில் வந்துள்ளமையும் அதை விளக்குவதற்கு அழிந்ததால் என்னும் மூன்றாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயர் (அழிந்தது+ஆல்)

பயன்படுகின்றமையையும் காணலாம். இதற்கு உரை எழுதியுள்ள ஔவை துரைசாமி பிள்ளையும் 'அகன்ற இடத்தையுடைய வேந்தர் நாடோறும் தமது தூசிப்படை கெடுதலால் ஆற்றாது புலம்ப' என்றே உரை எழுதியுள்ளார் (Avvai Duraisamy Pillai, 1950). அழிந்து என்பதற்குக் கெடுதலால் என்று மூன்றாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயரைக்(கெடுதல்+ஆல்) கொண்டே விளக்கியுள்ளார்.

செயவென் வாய்பாட்டு எச்சத்திலும் இந்த நிலையைக் காணலாம். செயவென் வாய்பாட்டு எச்சம் காரணப்பொருளில் வரும் என்று நச்சினார்க்கினியரும் கல்லாடனாரும் குறிப்பிடுவர். இந்நிலையில், செயவென் எச்சம் மூன்றாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயருடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

காமம் கடவ உள்ளம் இனைப்ப (ஐங்.237-1)

என்னும் அடியில் கடவ என்னும் செயவென் வாய்பாட்டு வினையெச்சம் காரணப்பொருளில் இனைப்ப என்னும் வினையெச்சத்தைக் கொண்டு முடிந்துள்ளது (Avvai Duraisamy Pillai, 1957). இதற்கு ஔவை துரைசாமி பிள்ளை 'காமம் செலுத்துதலால் மனம் வருந்தி' என்று மூன்றாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயரைக் (செலுத்துதல்+ஆல்) கொண்டு உரையெழுதியுள்ளார். இதன்மூலம், காரணப் பொருளில் வரும் வினையெச்சங்கள் மூன்றாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயருடன் பொருள் நிலையில் ஒன்றிவருகின்றன என்பதை அறியலாம் (Sadasiva Iyer Thi., 1999).

வினையெச்சமும் நான்காம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயரும்

தொல்காப்பியத்தில் ஒன்பது வினையெச்ச வாய்பாடுகள் சுட்டப்பெற்றுள்ளன. அவற்றுள் செயற்கு என்பதும் ஓர் வினையெச்ச வாய்பாடாகும். வினையெச்சமாகச் சுட்டப்பட்டிருப்பினும் இதன் வடிவம் ஆய்விற்குரியது. இதனை,

செயல் + கு → செயற்கு

என்று நான்காம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயராகவும் கருதலாம் (Agesthialingom, 2010b, p.7). இதன் வடிவத்தைப் பற்றி உரையாசிரியர்கள் பலவிதமான கருத்துகளைக் கூறியுள்ளனர். சேனாவரையர், இதனை, செயல்+கு என்று பிரித்துக் காண்கிறார் என்பது அவர் உரையின் மூலம் அறியமுடிகிறது. அவர் 'கு' என்னும் ஈற்றினை நான்காம் வேற்றுமை உருபாகக் கருதாமல், உ, ஊ, பு போன்று ஒரு வினையெச்ச விகுதியாகவே கருதுகிறார்.

'அவ்வகை யொன்பதும் என்றது இறுதி நின்ற இடைச்சொல்லான் வேறுபட்ட ஒன்பதும் என்றவாறு. அவ்விடைச் சொல்லாவன: உகரமும் ஊகாரமும் எனவும் இயரும் இயவும் இன்னும் அகரமும் குககரமுமாம்'

என்னும் உரையில் குகரம் என்பதை வினையெச்ச விகுதியாகவே கருதியுள்ளார் என்பது தெளிவு. எனினும், இது நான்காம் வேற்றுமையுடன் அமைப்பு ஒற்றுமை கொண்டிருப்பதைக் கருதி,

'செயற்கு என்னும் வினையெச்சம் நான்கன் உருபு ஏற்று நின்ற தொழிற்பெயரின் வேறாதல் கிளவியாக்கத்துட் கூறினாம்' என்று குறிப்பிட்டுக் கிளவியாக்கத்தில் (தொல்.சொல்.40) அவர்,

'செயற்கு என்னும் வினையெச்சம் உருபேற்று நின்ற தொழிற்பெயரோடு ஒப்புமை உடைத்தாயினும் உருபும் பெயரும் ஒன்றாகாது பகுப்பப் பிளவுபட்டிசையாது ஒன்றுபட்டிசைத்தலான் அதனின் வேறாயினாற் போல' என்று விளக்கியுள்ளார் (Sivalinganar, A., 1984).

அவர் கூற்றுப்படி, செயற்கு என்னும் வினையெச்சம் பிளவுபட்டிசைக்காது என்பதும் நான்கன் உருபேற்ற தொழிற்பெயர் பிளவுபட்டிசைக்கும் என்பதும் இரண்டிற்கும் உள்ள வேறுபாடாகும். இக்கூற்றினை ஏற்க மறுக்கும் கல்லாடனார்,

'இது உணல் என்னும் தொழிற்பெயர் நான்காம் உருபு ஏற்றவாறன்றோ எனின், அதுவும் ஓர் வழக்குண்டு. பெயர்ப்பொருண்மை நோக்கியவழி அதுவாகவும், காலம் நோக்கியவழி வினையெச்சமாகவும் கொள்க'

என்று பேசுபவரின் நோக்கம் கருதி இரண்டு நிலைகளில் அமையும் என்று கூறுகிறார். இவ்வாறு, உரையாசிரியர்களிடையே இதன் வடிவம் பற்றிக் கருத்து வேறுபாடு இருந்துள்ளது என்பதை அவரவர் உரைகளின் மூலம் அறியலாம். மேலும், நன்னூல் செயற்கு என்னும் வாய்பாட்டை வினையெச்ச வாய்பாடுகளில் ஒன்றாகக் கருதவில்லை என்பதும் குறிப்பிடத்தகுந்தது (Arumuka Navalar, 1999).

தொடரமைப்பு நிலையில் செயற்கு என்னும் வடிவம் நான்காம் உருபேற்ற தொழிற்பெயராகவே கருதத்தகுந்தது என்பதை நாம் கீழ்வரும் சான்றுகளின் வழியாக நிறுவலாம்.

உரையாசிரியர்கள் செயற்கு என்னும் வாய்பாடு எதிர்காலம் குறித்து வரும் என்று கூறியுள்ளனர். அவர்கள்,

(அவன்) உணற்கு வந்தான்

என்னும் சான்றினைக் காட்டியுள்ளனர். இங்கு உண்ணல் தொழில் வருதல் தொழிற்குப் பின்னர் நடைபெறும் நிலையில் இது எதிர்காலத்தில் வரும் என்று அனைவரும் விளக்கியுள்ளனர். எதிர்காலம் குறித்து வரினும் இதனை மேலும் நுணுக்கமாக, நோக்கப் பொருளில் எதிர்காலம் குறித்து வரும் என்று கூறலாம். மேற்கண்ட சான்றில், உணற்கு என்னும் வினையெச்சம் நோக்கப் பொருளில் வந்தான் என்னும் வினைமுற்றுடன் இணைந்து வந்துள்ளது. அவன் வந்ததன் நோக்கம் உண்பதற்காக என்ற பொருளில் உணற்கு வந்தான் என்னும் தொடர் அமைந்துள்ளது. இந்த வாக்கியத்தை நாம் கீழ்வருமாறும் உரைக்கலாம்.

அவன் உண்ணுதற்கு வந்தான்

அவன் உண்பதற்கு வந்தான்.

அவன் உண்ணுவதற்கு வந்தான்.

மேற்கண்ட மூன்று வாக்கியங்களையும் ஆராயும்போது உணல், உண்ணுதல், உண்பது, உண்ணுவது என்னும் நான்கு சொற்களும் 'கு' உருபை ஏற்று வந்துள்ளன என்பது விளங்கும். மேலும், உண்பது, உண்ணுவது என்னும் இரண்டும் 'அன்' சாரியை பெற்று வந்திருக்கின்றன.

உண்பது+அன்+கு → உண்பதற்கு

உண்ணுவது+அன்+கு → உண்ணுவதற்கு

சாரியைகள், பெயரும் வேற்றுமை உருபும் இணையும் நிலையில் அவற்றுக்கு இடையில் தோன்றும். எனவே, இங்கு வந்துள்ள உண்பது, உண்ணுவது என்பன பெயர்களே. குறிப்பாகத் தொழிற்பெயர்களே. உண்ணுதல் என்பதும் தொழிற்பெயரே. அதேபோன்றுதான் உணல் என்பதையும் நாம் தொழிற்பெயராகக் கருதி, அதனுடன் நான்காம் வேற்றுமை உருபு வந்துள்ளது என்று கொள்ளவேண்டும். மெய் ஈற்றுப் பெயர்கள் 'அன்' சாரியை ஏற்பதில்லை. எனவே,

உணல்+கு → உணற்கு

என்று வந்துள்ளது. மேலும், நான்காம் வேற்றுமையின் பொருள்களைச் சுட்டும் நூற்பாவில் (தொல்.சொல்.77), 'அதன் பொருட்டாதலின்' என்னும் பொருளும் நான்காம் வேற்றுமைக்கு உரியது என்று தொல்காப்பியத்தில் சுட்டப்பட்டுள்ளது (Sivalinganar A 1983). இப்பகுதிக்கு உரையாசிரியர்கள் அனைவரும்,

கூழிற்குக் குற்றேவேல் செய்யும்

என்னும் தொடரினையே சான்றாகக் காட்டியுள்ளனர். இது நாம் மேற்கண்ட செயற்கு என்னும் வினையெச்ச வாய்பாட்டுடன் பொருந்தி வருகிறது. அதாவது, இது நோக்கப் பொருள் உடையது. அவன் குற்றேவல் செய்வதன் நோக்கம் கூழ் பெறுவதற்காக என்று இதனை விளக்கலாம். அதேபோன்றுதான்,

அவன் உணற்கு வந்தான்

என்னும் வாக்கியத்தையும் 'அதன் பொருட்டாதல்' என்னும் பொருளில் வந்த நான்காம் வேற்றுமை உருபேற்ற தொழிற்பெயராக நாம் கருதவேண்டும். இதனை உணர்ந்திருந்த கல்லாடனாரும் வினையியலில் செயற்கு என்பதன் பொருளைப் பற்றிக் குறிப்பிடும்போது,

'இனிச் செயற்கு என்பது உணற்கு வந்தான் என்பது. இஃது அதற்பொருட்டென்னும் பொருள் பற்றி வரும்' என்று நான்காம் வேற்றுமைப் பொருளுடன் தொடர்புபடுத்தி விளக்கியுள்ளார். எனவே, மேற்காட்டிய சான்றுகளின் வழிச் செயற்கு என்பதனை வினையெச்சமாகக் கொள்ளாமல் நான்காம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயர் வடிவமாகவே கருதலாம்.

முடிவுரை

வினையெச்சமும் தொழிற்பெயரும் மொழியில் வெவ்வேறு நிலையில் செயற்படுவன எனினும் தொடரமைப்பின் ஒருசில இடங்களில் வினையெச்சமும் வேற்றுமை உருபேற்ற தொழிற்பெயரும் ஒற்றுமை கொண்டுள்ளன என்பதை மேற்காட்டிய மூன்று பகுப்புகளின் வழி அறியமுடிகிறது. ஒரு கருத்தைப் புலப்படுத்த மொழியில் ஒன்றுக்கும் மேற்பட்ட தெரிவுகள் உள்ளன என்னும் கூற்றுக்கு இவை சான்றுகளாக அமைகின்றன. இந்தக் கட்டுரையில் இடம்பெற்றுள்ள விளக்கங்கள் கீழே சுருக்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. புதைநிலையில் இரண்டு வாக்கியங்கள் இணையும் நிலையில் இரண்டாம் வாக்கியத்தின் செயப்படுபொருளுடன் முதல் வாக்கியம் தொடர்புகொண்டிருந்தால், புறநிலையில் வினையெச்சமும் இரண்டாம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயரும் ஒத்த பொருண்மையைக் கொண்டிருக்கின்றன. வினையெச்சம் காரணப் பொருளில் வரும்போது அந்த வினையெச்சத்தை மூன்றாம்

வேற்றுமை ஏற்ற தொழிற்பெயரைக் கொண்டும் விளக்கமுடிகிறது. செய்தற்கு, செய்வதற்கு என்னும் நான்காம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயர்களும் செயற்கு என்னும் வடிவத்துடன் பொருள்நிலையில் ஒத்துக்காணப்படுகின்றன. எனவே, செயற்கு என்னும் வினையெச்ச வாய்பாடு நான்காம் வேற்றுமை ஏற்ற தொழிற்பெயராகவே கொள்ளத்தக்கது. நன்னூலில் இந்த வாய்பாடு இல்லாமையையும் இக்கருத்திற்கு வலுச்சேர்க்கிறது. இவ்வாறு வேற்றுமைகளின் பொருண்மைகளையும் வினையெச்சங்களின் பொருண்மைகளையும் விரிவான ஒப்பாய்விற்கு உட்படுத்தும் நிலையில் தமிழின் தொடரமைப்புகளில் நாம் மேலும் பல விளக்கங்களைப் பெறலாம்.

References

Agesthialingom, S., (2010a), Sangaththamizh IV, International Institute of Tamil Studies, Chennai, India.

Agesthialingom, S., (2010b), Sangaththamizh V, International Institute of Tamil Studies, Chennai, India.

Arumuka Navalar (1999), Nannool Collathikaram Kaandigai Urai, Kazhaga Veliyeedu, Chennai, India.

Avvai Duraisamy Pillai, (1957), Ainkurunuru Source and Descriptive Text, Annamalai University, Chidambaram, India.

Avvai Duraisamy Pillai, (1950), Patirruppattu Source and Descriptive Text, Annamalai University, Chidambaram, India.

Sadasiva Iyer Thi., (1999), Ainkurunuru Source and text (Eelam Author Text), International Institute of Tamil Studies, Chennai, India.

Swaminatha Iyer, U.V., (2000), Kuruntokai Source and text, U.Ve.Sa. Library, Chennai, India.

Sivalinganar A (1984), Tolkappiyam uraivaḷam collatikaram vinaiyiyal, International Institute of Tamil Studies, Chennai, India.

Sivalinganar A (1983), Tholkappam Syllable Vocabulary Diversity, International Institute of Tamil Studies, Chennai, India.

Funding: NIL

Acknowledgement: NIL

Conflict of Interest: NIL

About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License